உ

ஸ்ரீஆண்டாள் ஸஹாயம்

. . பிபுத்தூர் ரெங்கமன்னாரென்ற

# ஆனைமோக்ஷசிந்து

இஃதை

ஸ்ரீவில்லிபுத்தூர் ஷாப் மெர்ச்செண்ட்

**K. M. P.** காட்டுவாவா ராவுத்தரவர்களும்,

ஷை மெர்ச்செண்ட்

**S. K.** சிக்கந்தர் மைதீன் ராவுத்தரவர்களும்,

கேட்டுக்கொண்டபடி



ஸ்ரீவில்லிபுத்தூர் புக்ஷாப் அண்டு வாசனைப்புகையிலை

மெர்ச்செண்ட்

**SRI. V. M. V.**

**வெங்கிடாசலம் பிள்ளையவர்கள்**

இயற்றியதை

ஸ்ரீவில்லிபுத்தூர்...

ஸ்ரீ கிருஷ்ணவிலாசப் பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1913-ம் ௵ [அணா 1.

ஸ்ரீ ஸஹாயம

...த்தீர் ... ங்கமன்னுரென்ற

# ...பம்மாக்ஷ சிந்து

## வெண்பா

ஆண்டாளின் கோவிலினிற் கழகாயமைந்த கயம்
மாண்டவதிசயத்தை யிம்மானிலத்திற்—நீண்ட புகழ்
சிந்தாயியம்ப திருமால் மருமகன்றன்
கந்தனுக்கு முன்னேனுன் காப்பு.

## கும்மி

1. கும்மியடி பெண்காள் கும்மியடிநம்பள்
கோதை பதமனங்கொள்ளுங்கடி
விம்மிதமாகவே யானைப்பாட்டைச்சொல்லி
விரைந்து கும்மியடியுங்கடி.

2. வாருங்களெல்லோரும் சேருங்கடி நல்ல
வங்காரப்பூஷணம் பூணுங்கடி
சேருங்கள் சிற்றிடை மீதினிலே யுயர்
சித்திரப்பாவாடை கட்டுங்கடி.

3. காலினிற் கெச்சங் கலகலென விரு
கையினிற் வளை பழபழனெ
குலிபதத்தை மனதிருத்தி யெல்லாத்
தோகையுமொன்றாயடியுங்கடி.

4. நாச்சியார் கோவிலின் வாசலிலே மிகக்
கீர்த்தியாய் வீற்றிருக்கின்றவரே
நேர்த்தியுடன் வாசனைப்புகையிலையை
நிறுத்துக்கொடுங்கள் ரூபாயரைக்கி.

5. என்று ஸ்ரீ. வி, யம், வி. அவர்களிடத்தினில்
ஏகமாய் ஜனங்கள் வாங்கிக்கொண்டு
யானையைப்பார்க்கவே ஜனங்கள் திரண்
டன்புடன் போகிறார் பாருங்கடி.

6. இப்படிப்பேர் பெற்ற புகையிலைதனை
யெங்கினுமே நானும் கண்டதில்லை
சங்கையில்லாமலே எனக்கோர் ரூபாய்க்கு
தந்திடச்செய்யுங்கள் தங்கையரே.

7. வேகமாய் யானைதனைப்பார்க்க வந்த
வீரர்கள் யாவரும் அக்கடையில் சற்று
தாமதம் செய்துமே வாங்கி வருகிறார்
சந்தோஷமாய் புகையிலை தன்னை.

8. நாமளும் வீணிலே தாமதம் செய்துமே
நேரத்தைப் போக்கிப் புகையிலையால்
யானையைப் பார்த்துமே ஆனந்தங் கைக்கொள்ள
நங்கையே வாருங்களெல்லோரும்,

9. மாலேச்சுற்றி ... டங்கள் கூடி
வேடிக்கை பார்க்கின்ற ம...
தாமதமில்லாமல் சல்தியிலே வார்த்தி
சட்டெனத் திட்டமாய் காணுங்கடி.

10. ஜன்னியால் யானேயும் சஞ்சலப்படுவதை
சல்தியாய் பாரடி தங்கையமே
இந்தவிதம் யிம்சை செய்திட யானேக்கி
யெங்கிருந்து ஜன்னி ஜனித்திட்டதோ.

11. வாருங்கள் கேட்டிவ் டாக்டர்களே யானே
வைத்தியம் செய்யவும் மாட்டீர்களோ
தீர்க்கமாய் எழுந்து செப்புந்தொழிலதைச்
செய்ய உயிரது பெற்றிடுமோ.

12. மோட்டார்க் கார்வண்டி கொண்டுசெல்கிரி
டாக்டரவர்களும் வந்துநின்று
நேர்த்தியுடன தொட்டுப் பார்க்கும்போது உயிர்
போக்கடிக்குமென்று யெண்ணிக்கொண்டு.

13. நாளேப்பகலினில் நாழிகை பத்துக்குள்
நான்வந்து சேருவேன் மருந்துடனே
யென்றந்தப் புண்ணியருஞ் சொல்லியல்லவோ
யேகிவிட்டார் மோட்டாரக் காரினிலே.

14. ஜன்னியினிம்சை பொருக்காமல் யானே
சங்கட மிகப்புரிந்து காலே
வெட்டி வெட்டி யிழுக்கும்போது யானே
கஷ்டப்பட்டு மிக கதரிடுமாம்.

15. சத்தமிட்டு யானே தத்தளிக்கும்போது
சகபாஷியானுமே யேது சொல்வான்
இத்தனே நாளுன்னேப் பாதுகார்த்து வந்த
யெந்தனுயிரையும் போக்கடிப்பேன்

16. யென்றுமே சொல்லியிருக்குந் தருணத்தில்
தம்பி முகமதுவைப் பார்த்து
யென்பதுரூபாய் சிலவு செய்திட்டேனென்
றெண்ணிடாதே தம்பி யென்றுரைப்பான்

நொண்டிச்சிந்து.

யென்பது ரூபாயெடுத்தார் யானேக்கு-யேற்ற மருந்துகளே வாங்கியேவந்தார், உரல்தனில்போட்டிடித்தார் நல்ல-சூக்கமாய் பச்சிலேவகை யுடனே, வேப்பெண்ணே சேர்த்துமேபாகர் இருவரும்-விரைவுடன்காய்ச்சியேயிரக்கி வைத்து, திரேகமுழுதும் தேய்த்து-யானேயைத் தேற்றிடலாமென்றெண்ணிக்கொண்டு, சந்தோஷமாகயிருந்தார் இருக்கும் போது-ஜன்னி யினிம்சையாற் சங்கடப்பட்டு, தலேயுடன் கால்களேயும் வெட்டி வெட்டி சங்கடப்பட்டிழுப்பதைப் பார்ப்பதற்கு, மனமே சகிக்கவில்லே கூடவந்த மாதர்களே விட்டுப்போக மனமுமில்லே, யென்றுமே பேசி

...முடனே ஜனக்கூட்டத்திற் சென்று, இவ்வித ... உலகில் யானையில்லை உயிர் போவதுந்தொல்லை, ...ர் கேட்டு ஏக்கமுற்றோரும் மன வூக்க முற்றோ ...ல் துவங்கிடுவர் அது கண்டுகூடிநின்றவரும் புலம்பிடுவர். ...திருக்கும்போது முகம்மதுவும் யெழுந்து பார்க்கும்போது முகக் ...றியால், யானையைவிட்டு உயிர் ஸ்ரீமந் நாராயணவென்று ஏகிவிட்டதே,

தந்தின தன தான.

யானை வைகுண்ட பிராப்தியான பின் தீக்ஷை முதலியதிருக்கி
மோக்ஷத்திற்கு சாஸ்திரத்தோடு அடக்கஞ்செய்தது

(வில்லிபுத்தூர் இதடி பெண்ணே என்ற வழிநடை சிந்து)
வர்ன மெட்டு.

1. அதிசயம் பாரடி பெண்ணே
ஆண்டாளின் கோவில்-ஆரணம் மாண்ட
அற்புதத்தைக் கேளடி கண்ணே
வேதியர்களும் நீதியாகவே வேதமோதுறார் யானைக்காகவே (அதி)

2. வெள்ளிக் குடங்களெடுத்தார்
இடைவிடாது-வாத்தியத்தோடு
பேகியே திருமுக்குளமடுத்தார்
சொந்தமாகவே விந்தையதாக மந்திரமோதி சுந்திரயானைக் (அதி)

3. அன்புடன் திருமஞ்சனங்கொண்டு
ஜனங்கிரண்டு-மண்டபம் சென்று
கும்பம் வைத்தோதினருட்சென்று
தீக்ஷையிரக்கியே யானைக்கியோக்ஷ காக்ஷிதனைக் கண்ணாலேபார்க்க (அதி)

4. ஆவலுமிக்க் கொண்டார்களே
சட்டத்தேர்போல-கட்டிடம்நீள
சப்பரம் போலமைத்தனர்களே
கஷ்டம் மிகப்பட்டு சப்பரத்திலமைக்க விற்பனன்செயலிது அற்புதம்பாரடி

5. வெள்ளிக்குடங்களி லிருந்த
ஜலமெடுத்து-சப்பரமடுத்து
ஒவ்வொன்றாய் ஊற்றினார் தொடுத்து
மேளவாத்திய கோஷ்டியாகவே மேட்டுத்தெருத்தேவர் தாஷ்டியாகவே

6. ஆடிஉர்ச்சவ நீடித்து நடந்த
ஐந்தாம் திருநாள்-கந்தபெருநாள்
அதிக ஜனப்பெருக்கம்போலவே
அரங்கன்கரிபோல துலக்கவைத்தார்கள் அழகுவாய்ந்திடபொருந்தவைத்
[தார்கள் (அதி)

7. நெற்றிக்குத்திருநாமமிட்டனர்
நீல வருணப்-பட்டுடித்தினர்
நேர்த்தியாய் மாலைகள் போட்டனர்
வீதிகள்தோறும் மேடைகள்தனில் ஜோடியாகவே கூடிநித்திற (அதி)

8. வேடிக்கை பார்த்துத்திரும்பியே
பார்க்கும்போதென்னை-கார்ககவே
நேசரைக்காணேமென் செய்வேனே
பார்த்தவர் யாரும் பைங்கிளி யெந்தன் பக்தாவிடம் சொல

9. யென்று புலம்பும்வேளையிலே
மற்ரொருபெண்ணாள்-பெற்றபாலனை
உற்றுப்பார்த்தும் தேடி வாருளே நற் (டீரோ.
நவத்திலுதித்து என் வயிற்றிற் பிறந்திட்ட அருமைப்பாலனை யாரும்கண்

10. எனப்புலம்பும் தருணத்தில்
ஜனங்கள்கூடி-மிரண்டு ஓடி
ஜாடினுற் கற்றாண்கள் மிதிலே
கஷ்டமுமிகப் பட்டுஜனங்களும் அஷ்டதிக்கிலும் எட்டி நிற்கையில் (அதி)

11. பொழுதும்போய் இருட்டினதே
கியாசு லைட்டைக்-கொண்டு இருட்டை
இம்சைசெய்து தாத்தினரே
ஏகாதேசி நாளானதினுலே ஏகவைத்திட வேணுமென்றுமே [அதி]

12. யெண்ணியல்லோ யிழுத்திட்டார்கள்
யானையை மேற்கு-முகமாய் நோக்கி
ஞர்களே ஜனங்கள் கூடியே.
அரும்பைவாரி யிரைப்பவரு மதைஅர்ச்சனை செய்யச்சொல்லுவோர்களும்

13. கூட்டங்கூட்டமாகவே ஜனம்
மறவர்தெரு-வழியிழுத்து
ஏகினர் குளத்துனுள் வாயில்
குங்குமம் வாரியிரைப்பவரு மதைக் கூவிமுகத்தில் அணிபவரும்மாக [அதி]

14. பின்னையும் திரும்ப வந்துமே
வேடிக்கை பார்த்து-முகந்தில் வேர்த்து
வீற்றிருக்கின்றவர் கோடியே
இருந்தஜனங்களும்எழுந்தஜனங்களும்இழுத்திடயானைமேற்கிற்சென்றிட

15. அதிசயமென்றெண்ணியல்லவோ
ஜனங்கள்மிக-மயங்கி வெகு
சப்தத்தின் பின்ருெடர்ந்தனரே
ஆவிலேமேற்பள்ளி ஆவலுடன்கொண்ட ஆதிநாருயுணசுவாமி பாதம்செகி

16. யென்றடக்கம் செய்தனர்களே
யானையைத்தானே-புவியில் மானே
காணபதெப்போ தென்றழுதனரே
வானமாமலை ஜீயர் தந்திட்ட வாரணம் இன்று மோக்ஷமானதே. [அதி]

17. என்றுமே புலம்புவார்களே
ஜனங்கள்மிக-ஒருங்கதாக
பேசிநடந்திடுவார்களே (றேன் [அதி]
முந்திய கதை மொழுந்துமிருக்கிறேன் பிந்தியேகானும் பிரித்துச்சொல்கி

18. வேடிக்கைச் சிந்தையும் பாடினேன்
வேங்டாசலம்-பங்கிடாமலே
வேண்டினேன் பிழை பொருப்பீரே
குற்றமெத்தனை இருந்திடினுமதை கூகமாக அறிந்துதள்ளுவீர். (அதி)

லக்கிரீடை நொண்டிச்சிந்து.

...யபத்தி யெட்டாம் ஆண்டினில் அமைந்த தைமாதம்
...ததி பகலில் மணி பன்னிரெண்டில் நடந்தவிந்தை பகர்ந்திடு
...ணர்ந்திடுவாய், சங்கராந்திவரும்படிக்கி யானையுடன் சல்தியில்
சென்று திரும்பிவந்து மாலுக்குள்புகுந்தனரே முகமதுவும் காலைக்கட்டத்
துணிந்தானவுடன், மதங்கொண்ட கரியாகையால் முகமதுவை மடக்கி
அடிக்க மனத்துடுக்குடனே ஓட்டமாய் ஓடியேதூணில் மறைந்து நின்று
ஒதுங்கினனே இளையோன் பதுங்கினனே, மாலைவிட்டு வெளியேவந்து
யானை வம்புசெய்வதுடன் தும்பிக் கையையுமோங்க சகபாஸ்மியான்மாவு
த்தன் சட்டென்வந்து சந்தேகமில்லாமல் கிட்டவே சென்றான், தெரு
டன் சன்னதிமண்டபம் தனிலிருந்து திரும்பத்திரும்பமன முரண்டுடனே
ஓட்டமாய்ஓடியேவந்து வீரர்களை விரட்டிடுமாம் ஜனத்தை அரட்டிடுமாம்,
புதுவைநகர்தனிலே வாழும்யெந்தன் பொற்கொடியே யானை மேற்கிற்
போகிறதைப்பார் மாலைவிட்டுமேல்புறத்தில் கரி மறவர்தெருவழி புகுந்து
சென்று, தெருக்கடந்து பெரியகுளம் தன்னிலே சிறப்புடன் சென்று
விளையாடையிலே மாவுத்தர்யிருபேரும் தெற்குத்தெரு முத்தையாவுடன்
கோட்டையாபிள்ளையுடனே, சகபாஷ்மியான்மாவுத்தர் யானையை சல்தி
செங்கமன்னர் ஆவ் என்றவுடனே கவனிக்கவில்லையேயானை கல்லாலடிக்
கலாமென்பார் சிலர் விரட்டிடுமென்பார், இரவினில் இம்சை செய்யும்
மூட்டுப் பூச்சியிருந்த சார்க்கட்டில்தனை நனையவேவைத்திருந்தார் ஜலத்தி
லதை காலைந்து துண்டாக ஒடித்திட்டதே, ஒடித்த யிரண்டொருதுண்
டை எடுத்து உயர்த்திடுமாம்கண்டு வெறித்திடுமாம் கட்டுக்கட்டாகக்கரும்
பை கொண்டுவந்து கட்டாயமாயானை பக்கமே போட்டால், நெருங்கியே
கிட்டவருமாம் வந்து கரும்பைக்கவர்ந்து பின் சென்றிடுமாம் குலைகுலை
யாய் கதலி கொண்டுபோய் சொடுத்திட்டாலுமதை தடுத்திடுமாம், [தந்தி]
அக்கரைதனில் சிலபேர் கல்லா லடிக்கவேணுமென்று அதட்டிடுவார்
விரட்டி விரட்டியேயானை மேல்பக்கம் வீரிட்டுக்கதறியே முடிக்கிடுமாம்,
குளத்தின்கரையைச்சுற்றி ஜனங்கள் கோடிகோடியாகக்கூடிநிற்கையிலே
கோதைகிருபையாலே குஞ்சரம் கொல்லவும் ஜனங்களை இல்லையேயென்
பார். கம்மாப்பட்டியில்சென்று கரி காலாலே குப்பைதனை சிதாடித்து
துதிக்கையால்மண்ணைவாரி தனது கோபத்தால்சிரசின்மேல் சிதறிக்கொ
ண்டு, விளையாடும்வேளையிலே நாயொன்று விரட்டிடவேயானை முடிக்
கிடவே யானையைத்தொடர்ந்துகூட வந்தஜனம் அவஸ்தைப்பட்டதையும்
அறைந்திடுவேன், கொள்ளடக்காவேரி பெருகிவரும் கொள்கையைப்போர்
ஜனக்கூட்டமதில் யெல்லவோடந்தவர்கள் ஆள்நெருக்கமிகுத்திடவேதரை
தனில்பாய்ந்து, முழங்காலுடைந்தவரும் தட்டழிந்து முட்டுண்டுநெத்தழிக்
துச்சாய்ந்த வரும் கணைக்கால்புரண்டுமே தான் மண்டியிட்டு கைகொ

ண்டு காப்பானைப்பிடித்தவரும், கட்டியவேல்
னத்துடன் சென்றோர் கலைக்கேது வெட்டிய
விழுந்தவரெவ்வள வென்றுரைப்பேன். தரைதனை
தவர் தானெழுந்திரு முன்னமவர்மீது விரைவுடன்பின்றொட
வர் மிதித்துமிதித்துக் குதித்தோடினரே, புதுமையிதெனநினை
மறந்து புயநெறிந்திடக்கல்லி லுருண்டவரும் மதுவினையுண்டவர்போல்
வெய்யல் மயக்கால் மண்டைகளுடைந்திடக் குளக்கரையில், கிடந்தவர்
கணக்கேது கரையடி காளிகோவிற்மேல் புரம் சுவரில் படிந்தேழுதகு
ரைந்து குரிதிவர பச்சை வரியெலும்பு முறிந்தவரும், கணக்கிடமுடியாது
தெரிந்தமட்டும் கழலுகிறேன்சொற் பிசகாது பிணக்கதுசேராது நிகழும்
வில்லிப் புதுவைதனில்நடந்த தோதுகிறேன், யானைப்பாகரின் திறமை
என்னாலானமட்டும் சொல்கிறேன் கேள்மாதே இருவர்களுக்கும் இளை
யோன் காசீம் இல்லாததினாலிம் மட்டேர்தாமதம், என்றுபேசிக் கூடிவோர்
கூட்டத்தில் யெங்கேபோ யிருக்கிறானென்றுமே கேட்பார் ஆத்தூர் ஆல
யந்தனிலே காசீம் யானைப்பாகனாகிவிட்டான் புவிமேலே, முகமதுமாவுத்
தனே சென்று முன்பின்கால்களுக்குமுள் சங்கிலிவைத்து சகபாசுமியான்
மாவுத்தன் யானைமேல் சல்தியி லேறிநடத்தினனே, காவளமிகுவில்லி
வீதிகளில் கைதூக்கிச் சலாம்செய்து யானையுடன் வந்திடலானவருமே
அவனியிலிம் மாகூஷிமைபோல்கண்டதில்லையெனவே, சிந்தையில்மிகமகிழ்
ந்தே கோதைவளர்ரெங்கமன்னாரின் செயலிதுவே யென்றேமிகப்புகழ்ந்து
கடவுள்தனக் கின்புறுஞ் சுதனென வேமொழிந்து, சென்றேவாரணத்தி
ற்கும் ஆண்டாள்க்கும் சேர்த்துநமஸ்கரித்துப் போற்றிகின்றே கொண்டா
னடித்தனரே கைதனைக்கொட்டிக் கோதைதனை இன்றும் வாழ்த்தினரே,

தந்தின தன தான.

## தெம்மாங்கு.

தண்டே சிலம்பு சல சலன என்றமெட்டு.

அன்னமே வாடி அதிசயம்பாரு
முன்னமே லேடி மொழிந்துமேகூறு.

1. பரிதாபிவருஷத்திலே பாகானதைமாஸத்தையிலே
பதினெழாம்தேதியிலே பார்த்ததைப்கர்ந்திடுவேன் அ

2. மாலை நாலுமணிக்கிமத யானை யேதுசெய்ததென்றால்
வாகாகக்காலவிழ்த்து வடதிசையாய் நோக்கினதே அ

3. பலகாரக்கடைவழியே பாங்காகப்போகையிலே
திரவான்களெல்லோரும் திண்டாட்டம் கொண்டார்கள் அ

பகடைதனிலே பிரியமுடன் அரிசிதனை
ளவே அனைவருமே ஐயோயென்னஅநீதியென்பார் அ

5. கடைகளை அடைத்தவரும் கஷ்டம்கப்பட்டவரும்
சக்கரன்யானையைபபோல் சல்திசுடவேணுமென்பார் அ

6. சடுவதுயேதுக்கையா துஷ்டத்தனம் செய்யவில்லை
அமராவதிபோல்வடக்கே ஆரணமும் சென்றிட்டதே அ

7. ஆசுபத்திரி தெருவழியே அடவுடனே போகையிலே
கோசுக்கடைமுன்பாக கொம்பானை நின்றிட்டதே அ

8. அரே ரெங்கமன்னாரென்று அல்லாவையும் தான்தொழுது
ஆனையின் பக்கத்திலே அனைவருமே நெருங்கினாரே அ

9. கூட்டத்தைமெப்பிக்கவும் கொம்பானை தப்பிக்கவும்
பக்கத்தில் வந்தவரை பதரத்துரத்திடுதே அ

10 வாகமரம் ஊரணிக்கி வந்தபுல்லுக்காரியெல்லாம்
ஆனைவருகுதென்று அலறினாளே பெண்களெல்லாம் அ

11 புல்லைத்தூக்கி ஓடுவாளாம் போட்டுவிட்டுமோடுவாளாம்
காசைக்கொடுத்தவளும் கதறியே வாடுவாளாம் அ

12 எல்லாருமாகக்கூடி இம்சைப்பட்டோடிடவும்
தில்லாலேயென்றுயானை திடீரென்று பாய்ந்திட்டதே அ

13 தாஷ்டீகமாகவே றோட்டுவழிபோகையிலே
சின்னக்கடைவீதியிலும் சின்னபின்னம் செய்யவில்லை அ

14 சுருக்காகப்போகையிலே குறுக்காகவந்தவனை
துதிக்கையால் தள்ளிவிட்டு துரிதமுடன்போய்விட்டது அ

15 ஊத்துமலைபரதேசி உன்னதமாய்க்கட்டிவைத்த
மண்டபத்தின் மேலேறிநின்றார் யானையைக்கோறி அ

16 மண்டபத்தைத்தான்கடந்து மங்காபுரம் பாதைவழி
றோட்டைவிட்டு மேல்புரத்தில் நோக்கினதேயானையுமே அ

17 சகபாஷியான் மாவுத்தனும் சல்தியிலே ஓடிவந்து
ரெங்கமன்னாரே ஜனத்தைபங்கம்செய்யவேண்டாமப்பா அ

18 மாவுத்தன் முகமதுவும் வாரணத்தின்பக்கம்சென்று
ஜனங்களெல்லாருமங்கே சட்டெனவே நின்றிடுங்கள் அ

19 என்றுசொல்லி வாரணத்திலேரப்போகும் வேளையிலே
தூரப்போகச்சொல்லியல்லோ துரத்தினதே ஜனத்தை எல்

20 கீழேவிழுந்தவரும் கிடந்துருண்டு எழுந்தவரும் (லாம் அ
தைரியமுள்ளவரும் நத்தளித்துவோடினாரே அ

21 ஓடின ஜனங்களெல்லாம் கூடவந்து சேருமுன்னே
ஐயம்பட்டியடுத்து வாரணமும் சென்றிட்டதே அ

22 மேலபபாதைவழியாயும் கீழப்பாதைவழியாயும்
குறுக்குப்பாதைவழியாயும் சுருக்காகவந்தவரும்

23 ஆனையைக்காணாமல் அவஸ்தைப்பட்டு நிற்கையிலே
குருக்ககுளக்கம்மாயிலே கொம்பானையைப்பார்த்திட்டாரே

24 பார்த்து ஜனங்களெல்லாம் பண்பாகநிற்கையிலே
பத்தமாய் முத்தையாவும் பகர்ந்திடுவான் பாகனிடம் அ

25 ஆண்டாளின் கிருபையினால் ஆரணத்தின் பக்கம்சென்று
அரட்டாதுகூப்பிடுமே விரட்டாதுநின்றிடுமே அ

26 தெற்குத்தெருதனில்வசிக்கும் தீர்க்கமுள்ளமுத்தையாவும்
திரமதாய்ச்சொன்னதினால் தீர்க்கமுடன்சென்றிட்டானே

27 ரெங்கமன்னாரே எந்தன் பாவா சேக்மகாராணை
சத்தியம் கடந்திடாமல் சட்டெனவே நின்றிடுவாய் அ

28 சேக்மதாரென்றசொல்லை செவிகொடுத்துகேட்டவுடன்
திக்கெட்டுஞ்செல்லாமல் திடீரென்றுநின்றிட்டதே அ

29 கஷ்டப்பட்டுக்காலைத்தொட்டு கிட்டப்போய்மேலைத்தொட்டு
வஸதாறு வா[illegible]தினால் வாயின்வழி யேறிவிட்டார் அ

30 கழுத்துக்கயிரில்லாவிட்டால் கரிவசமாகாதென்றெண்ணி
தண்ணிக்கயறுலேயல்லோஉன்னிதமாய்க்கட்டிவிட்டான் அ

31 கழுத்துக்கயர் போட்டவுடன் வைவசமாகியானை
சொன்னவார்த்தைகளையெல்லாம் துரிதமாய்க்கேட்குதையா

32 தெற்குமுகமாயானை திரும்பிவரும் வேளையிலே
திக்கெட்டும்படைசூழ திமிர்த்திட்டதே ஜனங்களாக அ

33 ரஸதாப்பிடிக்கவில்லை நாடிவந்த ஜனங்களுக்கு
ரோட்டுப்பிடிக்கவில்லை நோகாமல்நடப்பதற்கு அ

34 பெரியகடைத்தெருவில பிரலாபித்தான் கூடும்படியாய்
இன்னென்றுதெரிந்துவிட்டால் இஷ்டப்படிசெய்திடுவோம்

35 என்றுமே சொல்லிக்கொண்டு ஏகமாய்வரும்போது
பொல்லாத பாவிக்காகப்பொழுதும் போயிருட்டினதே அ

36 மாலுக்குக்கொண்டுவந்து மன்னர்களை சலாம்செய்து
சுகமாகவந்துசேர்ந்தோம் துரிதமாய்ச்சென்றிடுங்கள் அ

37 யென்றுசொல்லி மாவுத்தனு மேகிவிட்டான்மாலுக்குள்ளே
ஜனங்களெல்லாந்திரண்டு சன்னதியில் வந்து நின்று அ

38 மதம்பிடித்தயானையைத்தான் மாவுத்தனுக்கட்டிவிட்டான்
யென்றுசொல்லிக்கொண்டல்லோ ஏகிவிட்டார்ஜனங்களெல்லாம் அ

39 வேடிக்கைச்சிந்துதனை வேணமட்டும் எழுதிவைத்தேன்
குற்றமிருந்திடினும் கொப்பெனவேபொருத்திடுங்கள் அ

கஜேந்திர மோக்ஷ சிந்து முற்றிற்று.

# விளம்பரம்.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

ஸ்ரீ. வி. எம். வி. மனோ உல்லாச

## வாசனைப்புகையிலை.

இதனால்சகலமானகனதனவான்களுக்கும்தெரிவிக்கிற தென்னவென்றால்,

இம்மனோ உல்லாச வாசனைப் புகையிலையானது இவ்வூரில் எல்லாக்கடைகளிலும் சுக்குத் திப்பிலி முதலிய கடைச்சரக்கால் சுகந்தவாசனைப் புகையிலையென்று விற்பனை செய்து வருகிறார்களே அப்படிச்சுழுவா கமுடிந்த புகையிலையல்லயிது நயமான வெள்ளைப் புகையிலையில் இங்கிலீஷ் மருந்து முதலிய கடைச்சரக்குகளால் மேன் பாடாக கவனித்துச் செய்யப்பட்ட புகையிலை.

கிரையம்.

| | | |
|---|---|---|
| ½ பலம் டப்பா 1 க்கு | | 0—1—3 |
| 1 | ... | ... 0—2—3 |
| 1½ | ... | ... 0—3—3 |
| 2 | ... | ... 0—4—0 |

வியாபாரிகளுக்கு ரூபாய் 1 க்கு பலம் 10 வீதம் கொடுக்கப்படும்.

SRI. V. M. V. வெங்கிடாசலம்பிள்ளை
புக்ஷாப் & வாசனைப்புகையிலை மெர்சசெண்ட்
ஸ்ரீவில்லிபுத்தூர்.